# வலை

## என்ன நடக்குது இணையத்தில்?



10 /=

மடல் - 1 | 12-12-2009 | www.valaimag.com

077 22 60 165 | 077 89 34 831


# “வலை” இதழைப் பயன்படுத்துவது எப்படி?

"வலை” இதழானது இணையத்தில் வெளிவரும் பயனுள்ள கட்டுரைகளை, வீடியோக்களை, வேறு பல விடயங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தி, அவற்றை எங்கே; எந்த முகவரியில் போய்ப் பார்வையிட முடியும் என்பதை அறியத்தரும் பணியினைச் செய்கிறது.

இதற்கென “வலை” இதழ், இணையத்தில் வரும் விடயங்களுக்கான அறிமுகத்தை தனக்குரிய ஓர் ஒழுங்கில் வடிவமைத்துத் தருகிறது. இந்த வடிவமைப்பையும், அதனைப் பயன்படுத்தும் முறையையும் புரிந்துகொண்டால் மாத்திரமே இவ்விதழைப் பயன்படுத்த முடியும்.

இந்த விளக்கங்களைக் கீழ்வரும் வரைபடம் உங்களுக்குத் தருகிறது.

**தலைப்பு:** இணையத்தில் குறித்த விடயத்துக்கு வழங்கப்பட்டுள்ள தலைப்பு இங்கே தரப்படுகிறது.



**எலிக்குப் பதிலாக ஏழை**

குழந்தைகளுக்கான மருந்துகள் அமெரிக்காவில் விற்பனைக்கு வருவதற்கு முன் ஆபிரிக்காவில் குழந்தைகளில் ஆபத்தானதா என்று பரிசோதனை செய்யப்படுகிறது. மேற்குநாடுகளில் செல்வந்த நோயாளிகளைக் காப்பாற்றுவதற்கு முன்னர் குறிப்பிட்ட மருந்துகள் இந்தியாவிலும், பெருவிலும் ஏழைகளில் பரிசோதிக்கப்பட்டு அவர்கள் கடும் நோயாளிகளாக்கப்படுகிறார்கள் அல்லது உயிர் பறிக்கப்படுகிறார்கள்.

மேலும் படிக்க (இணைய முகவரி):
porukki.weblogs.us/2009/09/08/eazhai_eli/
இலகு முகவரி : bit.ly/7cl71J

**அறிமுகம்:** “வலை” யினால் பகிரப்பட்ட இந்தக் குறித்த விடயம் பற்றிய சிறு அறிமுகம் இங்கே இடம் பெறுகிறது. இவ்வறிமுகம் மூலம் இந்தத்தொடுப்பில் உள்ள விடயம் எதைப்பற்றியது என்கிற பருமட்டான அறிமுகம் உங்களுக்குக் கிடைக்கும்.

இக்குறிப்பு குறித்த பக்கத்தில் காணப்பட்ட ஒரு பந்தியாகவோ அல்லது “வலை” தொகுப்பாளர்கள் தாமாக எழுதிய அறிமுகமாகவோ அமையலாம்.

**இணைய முகவரி:** குறித்த விடயம் இணையத்தில் எந்த முகவரியில் உள்ளது என்பதை இங்கே நீங்கள் அறியலாம். இம்முகவரியை உங்கள் இணைய உலாவியில் (Internet Browser Software. Eg. Firefox, Internet explorer, Chrome) முகவரியை உள்ளிடும் இடத்தில் தட்டெழுதி இவ்விடயத்தை முழுமையாக பார்க்க முடியும்.

**இலகு முகவரி :** சில வேளைகளில் நீங்கள் உங்கள் உலாவியில் தட்டெழுதவேண்டிய இணைய முகவரி மிக நீண்டதாகவும், குழப்பமானதாகவும் காணப்படக்கூடும். அதற்குத் தீர்வாக “வலை” இதழ் உங்களுக்கு இலகுவாக தட்டெழுதத்தக்க சிறிய மாற்று முகவரி ஒன்றினை இங்கே தருகிறது. இணைய முகவரியை உள்ளிடுவது போலவே இந்த முகவரியை உங்கள் உலாவியில் (Browser) உள்ளிட்டும் அதே இணையப்பக்கத்தை நீங்கள் பார்வையிட முடியும். ஆங்கிலப் பெரிய சிறிய எழுத்துக்களைக் கவனித்து உள்ளிடவும். எண்களால் மட்டும் அமைந்த இதை விட இலகுவான மாற்று முகவரி எதிர்வரும் இதழ்களில் “வலை”யினால் உங்களுக்கு வழங்கப்படும்.

**இது இணையத்தை (Internet) பயன்படுத்தும் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்குமான இதழ்.**

இரண்டு வாரங்களுக்கொருமுறை, அந்தக்காலப்பகுதியில் இணையத்தில் வெளிவந்த முக்கியமான, பயனுள்ள தகவல்களை திரட்டி, அவற்றை எந்த இணைய முகவரியில் படித்தறியலாம் என வழிகாட்டுவதற்காகவே "வலை" வெளியிடப்படுகிறது.

வெவ்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் வெவ்வேறு திறமைகள் கொண்டவர்களும் இணையத்தில் வலைத்தளங்களையும் (Website) வலைப்பதிவுகளையும் (Blog) தொடங்கி மிகப்பயனுள்ள பல விடயங்களை எழுதி வருகிறார்கள்.

முன்பு அச்சில் வெளிவந்த இதழ்களும் கூட அச்சுச்செலவு கருதியும் மிகப்பரந்த வாசகர்களை அடைவதற்காகவும் இணையத்தளங்களில் தம்மை வெளியிட்டுக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன.

எமக்குக் கிடைக்கும் தமிழ் அச்சிதழ்களில் வெளிவருகின்ற தகவல்களையும் விட பலமடங்கு தகவல்களை இணையம் அன்றாடம் உள்வாங்கிக்கொள்கிறது.

ஆனால், இணையத்தில் இவ்வாறு வெளிவரும் எல்லாவற்றையும்நாம் எப்படி படித்தறிவது? எங்கே என்ன தகவலைப் பெறலாம் என்பதை நாம் எப்படித் தெரிந்துகொள்வது?

ஒவ்வொருநாளும் ஒவ்வொரு மணிநேரமும் எல்லா வலைத்தளங்களிலும் என்னென்ன புதிதாக வந்திருக்கிறது என்பதை நாம் போய்ப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டுமா?

இதற்குத்தீர்வாகவே, "வலை" வருகிறது.

எமது தொகுப்பாளர்கள் இணையத்தில் தமிழில் அன்றாடம் எழுதப்படும், வெளியிடப்படும் பயனுள்ள தகவல்களைத் திரட்டி, அவற்றின் தலைப்பையும், சிறு அறிமுகத்தையும் தந்து, அவற்றை எங்கே , எந்த இணைய முகவரியில் படிக்கலாம் என்பதையும் தொகுத்துத் தருகிறார்கள்.

இரு வாரங்களுக்கு ஒருமுறை 'வலை' இதழைப் பெற்றுக்கொண்டீர்களானால், அந்த இரு வாரங்களும் இணையத்தில் தமிழில் வெளிவந்த பயனுள்ள விடயங்களை நீங்கள் ஒரே பார்வையில் தெரிந்துகொள்வதுடன் உங்கள் இணைய இணைப்பைப் பயன்படுத்தி இங்கே தொகுத்துத்தரப்படும் முகவரிகளுக்குச் சென்று அவற்றை முழுமையாகப் படித்து அறிந்துகொள்ள முடியும்.

"வலை" இதழைப் பயன்படுத்துங்கள். ஆதரவு தாருங்கள். நன்றி.

முகப்புப் படங்கள் - படப்பிடிப்பு:வி. பிரசாந்தன் [ prashanth.isc@gmail.com ]

**கிருத்திகா உதயநிதியின் எய்ட்ஸ் விழிப்புணர்வு குறுந்திரைப்படம்**

[வீடியோ] ஐந்தரை நிமிடம் ஓடக்கூடிய அழுத்தமான குறும்படம். எய்ட்ஸ் நோயாளிகள் பற்றிய சமூகப்பார்வை குறித்த விழிப்புணர்வைக் கோரும் படம்.

**மேலும் படிக்க (இணைய முகவரி):**
**http://www.penniyam.com/2009/12/blog-post_6059.html**
**இலகு முகவரி : http://bit.ly/6TGGgc**

**கலையகம்: மண்ணும் மக்களும்: இஸ்ரேல் தடை செய்த ஆவணப்படம்**

[வீடியோ] இஸ்ரேலிய-பாலஸ்தீன பிரச்சினையை ஒரே தடவையில் முழுமையாக புரிந்து கொள்ள உதவும் ஆவணப்படம். இந்தத்தொடுப்பில் இப்படத்தினை முழுமையாக வீடியோவில் பார்வையிடலாம்.

**மேலும் படிக்க (இணைய முகவரி):**
**http://kalaiy.blogspot.com/2009/11/blog-post_27.html**
**இலகு முகவரி : http://bit.ly/7mYTG0**

**தமிழ் உரைவடிவத்தை குரல்வடிவில் படித்துக்காட்டும் செயல**

தமிழ் உரைப்பகுதி ஒன்றினை வழங்கினால் இம்மென்பொருள் அதனை உரத்துப் படித்துக்காட்டும். பார்வை இழந்தவர்கள் இதனால் பெறப்போகும் பலன்கள் அளப்பரியவை.

**மேலும் படிக்க (இணைய முகவரி):**
**http://mmauran.net/blog/?p=56**
**இலகு முகவரி : http://bit.ly/6euVsz**

### சிசேரியனும் தாய்ப்பாலும் - மூடநம்பிக்கையும் உண்மை நிலவரமும்

மூட நம்பிக்கை 1 : அறுவை சிகிச்சை செய்தபின்னர் தண்ணீர் குடித்தால் புண் சீழ் பிடிக்கும் : மூட நம்பிக்கை 2 : குளுக்கோஸ் ஏறும் போது தண்ணீர் குடிக்க கூடாது: மூட நம்பிக்கை 3 : சிசேரியன் பண்ணியதும் குறைந்தபட்சம் 6 மணி நேரம் மயக்க நிலையிலேயே இருப்பார்கள். மேலும் பல...

மேலும் படிக்க (இணைய முகவரி):
http://www.payanangal.in/2009/11/blog-post.html
இலகு முகவரி : http://bit.ly/2PsPCA

### க்ருஷ்ணனும் அழுக்கும்

கலஸோ எழுதிய கா என்ற புத்தகம், இந்திய புராணக்கதைகளை அடிப்படையாகக்கொண்டு எழுதியது. அதில் க்ருஷ்ணன் கதாபாத்திரம் சுவையானது. ஒரு சம்பவம்.

மேலும் படிக்க (இணைய முகவரி):
rudhrantamil.blogspot.com/2009/11/blog-post_22.html
இலகு முகவரி : bit.ly/5hZb4j

### எலிக்குப் பதிலாக ஏழை

குழந்தைகளுக்கான மருந்துகள் அமெரிக்காவில் விற்பனைக்கு வருவதற்கு முன் ஆபிரிக்காவில் குழந்தைகளில் ஆபத்தானதா என்று பரிசோதனை செய்யப்படுகிறது. மேற்குநாடுகளில் செல்வந்த நோயாளிகளைக் காப்பாற்றுவதற்கு முன்னர் குறிப்பிட்ட மருந்துகள் இந்தியாவிலும், பெருவிலும் ஏழைகளில் பரிசோதிக்கப்பட்டு அவர்கள் கடும் நோயாளிகளாக்கப்படுகிறார்கள் அல்லது உயிர் பறிக்கப்படுகிறார்கள்.

மேலும் படிக்க (இணைய முகவரி):
porukki.weblogs.us/2009/09/06/eazhai_eli/
இலகு முகவரி : bit.ly/7cl71J

### தினமலர் – மலிவு விலையில் மனு தர்மம் !!

பெரியார் இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டபிறகும் அவரை மட்டம்தட்டி இன்றளவும் செய்திகளை வெளியிடுகிறார்கள். இசுலாமியர்களை தீவிரவாதிகளாக சித்தரித்து அந்த சமூகத்தையே தமிழ் நாட்டில் அச்சுறுத்தியதில் ஆ.எஸ்.எஸுக்கு அடுத்த இடம் நிச்சயம் தினமலருக்குத்தான்.

மேலும் படிக்க (இணைய முகவரி):
vinavu.com/2009/11/25/dinamalar/
இலகு முகவரி : bit.ly/5J9ACF

### மணமுறிவுகள் ஏன்? எந்தப் பொருத்தம் முக்கியமானது?

சட்டரீதியான விவாகரத்து என்பது எமது சமூகத்தில் இன்னும் பரவலாகாத போதும் மணமுறிவுகளுக்குக் குறைவில்லை என்பதும் உண்மையே. திருமணத்தின் பின்னான வாழ்வு நீடித்து நிலைக்குமா அல்லது முறிந்து போகுமா என்பதற்குக் காரணங்கள் என்ன?

மேலும் படிக்க (இணைய முகவரி):
hainallama.blogspot.com/2009/11/blog-post_28.html
இலகு முகவரி : bit.ly/7QOWrX

### காதலில் விழுந்தவர்களுக்கு & விழப்போகிறவர்களுக்கு!!

ஆண்கள் என்ன செய்தாலும் பெண்களிடம் நல்ல பெயர் வாங்க முடிவதில்லை. எப்போது பார்த்தாலும் சண்டைகள் மட்டுமே. (குறிப்பாக காதலர்களுக்கிடையில்) இந்தப் பிரச்சினை தீர சில ஐடியாக்கள இங்கே உங்களுக்கு....

மேலும் படிக்க (இணைய முகவரி):
ungalranga.blogspot.com/2009/11/blog-post_26.html
இலகு முகவரி : bit.ly/8RpfYu

### பொதுவுடைமைவாதிகளுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்தவர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியம்

தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் தனது நாற்பது வருடகால பொதுவுடைமை அரசியல் வாழ்வில் பல்வேறு நெருக்கடிகள் அச்சுறுத்தல்கள் கொலை முயற்சிகளின் மத்தியில் தொடர்ந்து வந்த சோதனைகளில் சித்திகள் பெற்றே வந்தார்.

மேலும் படிக்க (இணைய முகவரி): inioru.com/?p=7963
இலகு முகவரி : bit.ly/5QB68W

### சிகரெட்டும் சில பாக்டீரியாக்களும்! « மேலிருப்பான்

இதுவரைக்கும் சிகரெட்டுக் குடிக்கும்போது வர்ற புகையினால மட்டும்தான் பிரச்சினை வருதுன்னு நெனச்சிக்கிட்டு இருந்தேன் (நீங்க கூடத்தானே?). ஆனா இப்போ, புகையினால மட்டுமே பிரச்சினை இல்லைன்னு ஒரு புது குண்டைத் தூக்கிப் போடறாங்க சில ஆய்வாளர்கள்!?

மேலும் படிக்க
இலகு முகவரி : bit.ly/5LpoDo

**இஸ்லாம் தோன்றிய வரலாறு - திரைப்படம்**

மெக்கா என்ற ஒரு பாலைவன நகரில் முகமது நபிகளால் போதிக்கப்பட்ட புதிய சிந்தனைகள் பார் முழுவதும் பரவியது எப்படி? கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இஸ்லாம் என்ற புதிய மதம் தோன்றிய ஆரம்ப காலங்களை சித்தரிக்கும் திரைப்படம். திரைப்படத்தை இந்த முகவரியில் பார்க்கலாம்.

**மேலும் படிக்க (இணைய முகவரி): kalaiy.blogspot.com/2009/11/blog-post_9395.html**
**இலகு முகவரி : bit.ly/5GhoTM**

**தமிழ் சினிமாவில் பெண் இயக்குனர்கள்**

தமிழ் சினிமாவில் இயக்குனர் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளில் பெண்களின் பங்கு வெகு குறைவாக இருக்கிறது. தமிழ் சினிமா பேச ஆரம்பித்து எழுபத்தொன்பது வருடங்கள் ஆகியும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் பெண் இயக்குனர்கள் வந்து போயிருக்கின்றனர். இதிலும் பெரிதாய் பேசப்பட்டவர் என எவருமே இல்லாததும் மற்றொரு குறையாகவே இருக்கிறது.

**மேலும் படிக்க (இணைய முகவரி): ayyanaarv.blogspot.com/2009/11/blog-post_17.html**
**இலகு முகவரி : bit.ly/4YDCoJ**

**இவர் படையப்பாவில் வரும் நீலாம்பரி அல்ல**

இது நீலாம்பரியினுடைய முதலாவது திரைப்படம் என்றாலும் அவருடைய நடிப்பு துல்லியமானது. நான் டில்லியில் நாடகங்களில் நடித்து வருகிறேன். அது தவிர நாடகத்தை சமூகப் பிரச்சினைகள் தொடர்பான புரிதலை ஏற்படுத்தும் ஒரு ஊடகமாக நான் காண்கிறேன் என்கிறார் நீலாம்பரி. இந்த நீலாம்பரி வேறு யாருமல்ல. இலங்கையின் முதலாவது மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாளின் புதல்வியே தான்.

**மேலும் படிக்க (இணைய முகவரி): globaltamilnews.net/tamil_news1.php?nid=17742&cat=9**
**இலகு முகவரி : http://bit.ly/5eGlJc**

**வன்முறையின் வாசற்படி**

ஆனந்த விகடனில் சிம்புவின் பேட்டி. பி.எம்.டபுள்யு x6 காரில் ஈ.சி.ஆரில் 220 கி.மீ வேகத்தில் போய் இருக்கிறேன் என்பதை பெருமையாக பறைசாற்றும் பேட்டி. இந்த பேட்டியில் இருக்கும், ஆணவமும், அகங்காரமும் எத்தகையது என்று சொல்ல தேவையில்லை. டெல்லி/மும்பாயில் நடப்பது போல சாலையோரங்களில் படுத்து கொண்டிருப்பர்களின் மீது வண்டியேற்றி கொல்லுவது ஒரு பணக்கார விளையாட்டா? இவரை பார்த்து முட்டாள் ரசிகர்கள், "தலீவர் போறா மாதிரி நாமளும் போவோம்"னு வேக விளையாட்டில் ஈடுபட்டு உயிரை விட்டால், யார் பொறுப்பு?

**மேலும் படிக்க (இணைய முகவரி): urpudathathu.blogspot.com/2009/10/blog-post.html**
**இலகு முகவரி : bit.ly/7WWQVH**

**1999- விமர்சனம்**

என்றைக்குத் தசாவதாரம் பார்த்து ஏமாற்றம் அடைந்தேனோ அன்றிலிருந்து திரையரங்குகளுக்குப் போய் தமிழ்ப் படங்கள் பார்ப்பதைத் தவிர்த்து வந்திருக்கிறேன். 10 டொலர்களையும் இரண்டரை மணித்தியாலங்களையும் வீணடிப்பதாக ஒரு உறுத்தல் என்னுள் இருந்தபடியே இருக்கும். ஆனால், 1999 வூட்சைட் சினிமாவில் திரையிடப்படுகிறது என்றதும் போய்ப் பார்த்துவிட மனம் துடித்தது. காரணங்கள் பல.

**மேலும் படிக்க (இணைய முகவரி): kiruthikan.blogspot.com/2009/11/1999.html**
**இலகு முகவரி : bit.ly/6r9R3e**

### செல்பேசியில் தமிழ் வலைப்பக்கங்கள்

ஒரு வழியாக செல்பேசியில் தமிழ் வலைப்பக்கங்களைப் பார்க்க முடிகிறது. Skyfire என்ற புதிய செல்பேசி உலாவி பற்றிய இந்தத் தகவல் ட்விட்டரில் விக்கியும் பிரபு ஃபெராரியும் போட்ட ட்வீட்களில் கிடைத்தது. இந்த உலாவி விண்டோஸ் மொபைல் 5, 6, நோக்கியா என் சீரீஸ், இ சீரிஸ் ஆகியவற்றுக்குக் கிடைக்கிறது.

மேலும் படிக்க (இணைய முகவரி):
இலகு முகவரி : bit.ly/7GbsyO

### சிநேகிதிகளின் கணவர்கள்

[கவிதை] சிநேகிதிகளின் கணவர்களுடனான சிநேகங்களில் எப்போதும் உருவாகிவிடுகிறது ஒரு சதுரங்கக் கட்டம்

மேலும் படிக்க (இணைய முகவரி):
asifmeeran.blogspot.com/2009/08/blog-post_08.html
இலகு முகவரி : bit.ly/6WSHAP

### பாபர் மசூதி விவகாரம்: முஸ்லிம்கள் தரப்பு நியாயங்கள் (பாகம் இரண்டு)

[வீடியோ] விவாதம் பழையது என்றாலும் அதிலுள்ள நியாயங்கள் நிதர்சனமான உண்மை.

மேலும் படிக்க (இணைய முகவரி):
meiyeluthu.blogspot.com/2009/11/blog-post_27.html
இலகு முகவரி : bit.ly/5lvQ2D

### வேருக்காக வெட்டிவேர் வளர்ப்பு

எனக்கு வரும் தொலைபேசி அழைப்புக்கள், மின்னஞ்சல்கள் 99% வெட்டி வேரை தனி பயிராக வளர்த்தால் (வேருக்காக) லாபம் கிடைக்குமா? எவ்வளவு வருமானம் ? எத்தனை நாட்களில் ? யாரிடம் விற்பது ? என்பது பற்றித்தான் இருக்கும்.

மேலும் படிக்க (இணைய முகவரி):
maravalam.blogspot.com/2009/11/blog-post_28.html
இலகு முகவரி : bit.ly/7MBgQ0

### சோப்பு வேண்டாம் தண்ணீரில் முக்கி எடுத்தால் போதும்!

"சோப்பா! சும்மா தண்ணீரிலே கழுவினாலே போதும் ஒரு சொட்டு எண்ணெய்ப் பிசுக்கு இல்லாமல் பாத்திரம் புத்தம் புதிதாகிவிடுகிறது... இது புதுவித பாத்திரம் எண்ணெயில் அப்பளம் பொரித்தாலும் பாத்திரத்தில் எண்ணெய் ஒட்டுவதில்லை'

இலகு முகவரி : bit.ly/8Y6Xt3

### கழுதை, தேங்கி நிற்கும் நீர்... அதிரவைக்கும் அப்துல்கலாம் இல்லம்

யுனிசெப் உதவியுடன் இந்திய-பிரான்ஸ் கூட்டுத் தயாரிப்பில் அப்துல் கலாம் பற்றிய படத்தை இயக்குகிறார் மாதவ் பண்டா. இதில் அப்துல் கலாமும் நடிக்கிறார் என்பதுதான் ஆச்சர்யமான செய்தி. அவரது வீட்டையும், அந்த மாபெரும் மனிதர் வாழ்ந்த தெருக்களையும் பார்த்தால்தான் நமது பெருமை நமக்கு புரிவது எப்போது என்ற பெரும் ஏக்கம் வந்து தொலைக்கிறது. சாலையெங்கும் தேங்கி நிற்கும் மழை நீர். அங்கங்கே மேய்ந்து கொண்டிருக்கும் கழுதைகளையும், பன்றிகளையும் கடந்துதான் டூரிஸ்ட்டுகள் அந்த வீட்டின் முன் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்கிறார்கள்

மேலும் படிக்க (இணைய முகவரி):
nkdreams.com/cinema/?p=5114
இலகு முகவரி : bit.ly/7WVE6g

### இசையும் இறைவனும்

ஒரு இசை வடிவத்தை நீங்கள் ரசிக்கிறீர்கள் என்றால் அந்த இசை உங்களை ஈர்த்தது என்பதல்ல. உங்களுக்குள் இருக்கும் இறைநிலை ஒலிவடிவில் இருக்கிறது. அந்த ஒலி தன்னை போன்ற இசைவடிவை வெளியில் இருந்து ஈர்த்தது. உங்கள் மனம் மற்றும் ஆன்மாவின் நிலைக்கேட்ப இசை உங்களை ஈர்க்கும். நீங்கள் மிகவும் கடினமான தன்மையில் இருந்தால் கடினமான இசையும், மிகவும் மென்மையாக இருந்தால் மெல்லிசையும் உங்களை கவரும்.

மேலும் படிக்க (இணைய முகவரி):
vediceye.blogspot.com/2009/11/blog-post_28.html
இலகு முகவரி : bit.ly/7Vhg17

### பாகற்காய் சூப்

பாகற்காயை பொடியாக நறுக்கி தண்ணீரில் அலச வேண்டும். சிறிது மஞ்சள் பொடி சேர்த்து குக்கரில் 2 விசில் விட்டு வேக விட வேண்டும். வாணலியை அடுப்பில் வைத்து நெய் விட்டு சோம்பு, மிளகு, உளுத்தம் பருப்பு, பட்டை, கறிவேப்பிலை போட்டு தாளிக்க வேண்டும். அத்துடன் வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் சேர்த்து வதக்க வேண்டும். இத்துடன் வெந்த பாகற்காய், சூப் பவுடர் சேர்த்துக் கிளறி, தண்ணீர் சேர்த்து குக்கரில் வைத்து ஒரு விசில் விட்டு இறக்க வேண்டும்..

மேலும் படிக்க (இணைய முகவரி):
இலகு முகவரி : bit.ly/6JvSMK

இலங்கை தமிழ் பேசும் சமூகங்களின் நூல்களை, சஞ்சிகைகளை, எழுத்தாவணங்களை மின்வடிவத்தில் ஆவணப்படுத்திப் பாதுகாத்து அவற்றை அனைவரும் எந்நேரமும் வாசிப்பதற்கும் உசாத்துணைக்கும் பயன்படுத்துவதற்கு இணையத்தில் இலகுவிற் கிடைக்கக் கூடியதாக வெளியிடும் இலாப நோக்கற்ற தன்னார்வக் கூட்டுமுயற்சி.

4700 இலங்கை தமிழ் நூல்களும்

சஞ்சிகைகளும்....

ஒரே இடத்தில்....

எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பெற்றுப் படிக்கக்கூடியவண்ணம்....

**முழுக்க முழுக்க இலவசமாக...**

**www.noolaham.org**

இது எம் அனைவரதும் திட்டம். நாமெல்லோரும் இத்திட்டத்தில் உறுப்பினராக இணைந்து எம்மாலான பங்களிப்புக்களை வழங்கி இப் பயன்மிகு முயற்சியை வளர்த்தெடுப்போம்..!

**மாபெரும் விதைக் கொள்ளை!**

இந்தியா ஒரு நெற் பயிர் தேசம். பலவகையான உயிர்களைக் கொண்ட கலவையான சூழல் அமைப்பில் நெல் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்தியாவின் பாரம்பரியத்திலும், மதம் சார்ந்த விழாக்களிலும், சடங்குகளிலும் மிக நீண்ட காலமாக நெல் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. நெல் பயிரின் மீதான இந்த முனைப்பு இந்திய உழவர்களிடம் பல ரக நெல் பயிர்களையும், பல வகையான தொழில் நுட்பங்களையும் உருவாக்கி இருந்தது. சில ஆதிவாசி மக்களின் நெல் குறித்த அறிவு, பன்னாட்டு தொழில்நுட்பங்களையும்விட சிறந்தோங்கி இருந்தது.

மேலும் படிக்க (இணைய முகவரி):
இலகு முகவரி : http://bit.ly/8orvVr

**எங்கள் கிராமத்தில் ஒரு குளம் இருந்தது...!**

'கிராமங்களின் இயல்பு தொலைந்துவிட்டது' என்பது எல்லோரும் பேசி சலித்த வாக்கியமாகிவிட்டது. ஆனாலும் அவற்றை பேசுவதற்கான தேவைகளும், காரணங்களும் மேலும், மேலும் பெருகியபடியே இருக்கின்றன. உலகமயமாக்கத்தின் விளைவாக கிராமங்களில் ஏற்பட்டிருக்கும் நுண்ணிய மாற்றங்கள் பற்றிய மாற்றுப்பார்வைகள் அவசியமாகின்றன.

மேலும் படிக்க (இணைய முகவரி):
இலகு முகவரி : http://bit.ly/7KFeEN

**பன்றிக் காய்ச்சல்: மரண வியாபாரிகளின் கையில் மக்களின் வாழ்க்கை!**

நோய்க்கு காரணமாக இருக்கும் கால்நடைகளையும், நோய்களைக் கடத்தும் வைரஸ் கிருமிகளையும், நோய்களுக்கான மருந்துகளையும் காப்புரிமை என்ற சூழ்ச்சி வலையின் மூலம் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பன்னாட்டு பகாசுர நிறுவனங்கள், மக்களின் நல்வாழ்வை கெடுப்பதன் மூலம் தங்கள் மரண வியாபாரத்தை பெருக்கிக் கொள்கின்றன.

மேலும் படிக்க (இணைய முகவரி):
இலகு முகவரி : http://bit.ly/5oPRx9

**தெலுங்கானா தனி மாநிலம் : மத்திய அரசு அறிவிப்பு; போராட்டங்கள் வெடிப்பு!**

தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க மத்திய அரசு சம்மதம் தெரிவித்ததற்கு எதிர்ப்பு வெடித்துள்ளது. ஆந்திராவின் ராயலசீமா, கடலோர ஆந்திரா பகுதிகளைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பிக்களும், எம்.எல்.ஏக்களும் தெலுங்கானா மாநிலம் அமைக்கக் கூடாது என போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

**மேலும் படிக்க (இணைய முகவரி): http://inioru.com/?p=8491**
**இலகு முகவரி : http://bit.ly/5qMftd**

**பழங்குடி மக்களின் இன உரிமைக்கான அடையாளங்களும் – போராட்டங்களும் :குட்டிரேவதி**

பழங்குடிகளின் எண்ணிக்கையையும் புகைப்படங்களையும் காட்டி தனியார் தொண்டு நிறுவனங்கள் பிராந்திய அளவில் சர்வாதிகாரம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறன என்பதும். தமிழகத்தில் உள்ள இருபத்தியாறு வகையான பழங்குடி மக்களின் நிலைமையும் அவர்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அறிவிப்போடு வரும் சமூகப் பணியாளர்களின் கைகளில் சிக்கிக்கொண்டு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றன.

**மேலும் படிக்க (இணைய முகவரி): http://inioru.com/?p=8061**
**இலகு முகவரி : http://bit.ly/8Audmo**

**நான் எந்தக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டேனோ அதைத்தான் பேராண்மையில் சொல்லியிருக்கிறேன்**

எந்தவித சினிமா பின்புலமும் இல்லாமல், சினிமாவை கற்று, சீரியஸான கருத்துகளை தம்முடைய படங்களில் சொல்லி வெகுஜன சினிமாவில் வெற்றிப் பெற்றவர். வெற்றிக்குப் பின்னால் எல்லோரும் செல்வார்கள் என்ற பேச்சுகள் இருந்தாலும் வெற்றியின் சூத்திரமும், சினிமா பற்றிய அறிதல்களும் இன்றும் மர்மங்களாகவே உள்ளன. இதைப் போல் பல சந்தேகங்களுடனும், கேள்விகளுடனும் இயக்குனர் எஸ்.பி. ஜனநாதனை புதிய புத்தகம் பேசுது இதழுக்காக சந்தித்தோம். அந்த சந்திப்பில் நடந்த நேர்காணலின் சில பகுதிகள்......

**மேலும் படிக்க**
**இலகு முகவரி : http://bit.ly/77OR7F**

**நேபாள தேசிய இனங்களின் சமஷ்டிக் குடியரசுகள்**

வருகிற டிசம்பர் 11 ம் திகதி, "நேபாள தேசிய இனங்களின் சமஷ்டிக் குடியரசு" பிரகடனம் செய்யவிருப்பதாக மாவோயிஸ்ட்கள் அறிவித்துள்ளனர். புதிய குடியரசு 13 சமஷ்டி அடிப்படையிலான சுயாட்சிப் பிரதேசங்களைக் கொண்டிருக்கும். இவற்றில் 11 தேசிய இனங்களின் பெயர்களைக் கொண்ட "நாடு"களாக இருக்கும்.

**மேலும் படிக்க (இணைய முகவரி): http://kalaiy.blogspot.com/2009/12/blog-post_09.html**
**இலகு முகவரி : http://bit.ly/7hNqv5**

**அணுகுண்டு சோதனைகள் புஸ்வாணமானதா?**

1998 ஆம் ஆண்டு மே மாதம் இந்தியா நடத்திய ஐந்து விதமான அணுகுண்டு சோதனைகளுள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் ஹைட்ரஜன் குண்டு சோதனை முழுத்தோல்வியடைந்துவிட்ட ஒன்று என சங்கு ஊதியிருக்கிறார், அணுசக்தி அறிவியலாளார் கே.சந்தானம்.

**மேலும் படிக்க (இணைய முகவரி):**
**இலகு முகவரி : http://bit.ly/4qw7KI**

**சட்டவிரோதமாக அமெரிக்க எல்லை கடக்க உதவும் சாதனம்**

கலிபோர்னியா பல்கலைக்கழக விரிவுரையாளர் ரொட்ரிகோ டொமின்கேஸ், சட்டவிரோதமாக அமெரிக்க எல்லை கடக்க விரும்பும் குடியேறிகளுக்கு வழிகாட்டும் இலத்திரனியல் சாதனம் ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

**மேலும் படிக்க (இணைய முகவரி): http://kalaiy.blogspot.com/2009/12/blog-post_10.html**
**இலகு முகவரி : http://bit.ly/54z2xV**